**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் ஏப்ரல் திங்கள் 11ம் நாள் திங்கள்கிழமை</u>

**<u>அ.வ.எண்.393/2020 இல் இ.ம.எண்.01/2020</u>**

1. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, சூளேஸ்வரன்பட்டி, மகாத்மா காந்தி தெரு, கதவு எண்.35, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.சவுண்டப்பன் மகன் சுமார் 70 வயதுள்ள திரு.பாஸ்கரன்.

2. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, சூளேஸ்வரன்பட்டி, மகாத்மா காந்தி தெரு, கதவு எண்.35, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.பாஸ்கரன் மனைவி சுமார் 70 வயதுள்ள திருமதி.பார்வதி.

... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

சேலம் மாவட்டம், குகை, ராமலிங்க சௌடேஸ்வரி மடம் தெரு, கதவு எண்.86/40A என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.பாலசுப்பிரமணியம் மனைவி சுமார் 63 வயதுள்ள திருமதி.கலாவதி.

.... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

மனுதாரர்கள் / வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் உள்ள தாவா மனுச் சொத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 16.12.2020

இம்மனுவானது கடந்த 22.03.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுசீந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**இறுதி உத்தரவு**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**DESCRIPTION OF PROPERTY**

முன்பு திருப்பூர் தற்போது கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி ரிசப்டிடு, பொள்ளாச்சி தாலூக்கா, சூளேஸ்வரன்பட்டி கிராமம் முன்பு க.ச.141 நெ. காலைக்கும் தற்போது க.ச.141/397 நெ காலைக்கும் பிளாட் நெ.96, 97க்கும் கட்டுப்பட்டதும், பத்திர எண்.590/1962ல் கண்டுள்ள இடத்தில் பத்திர எண்.986/90, 2474/87 நெம்பர்களாக கிரையம் செய்து விட்ட இடங்கள் நீங்களாக மீதமுள்ள சொத்திற்கு செக்குபந்தி அதாவது,

கிழமேல் ரோட்டுக்கும் ... தெற்கு

தங்கம்மாள் வீட்டிற்கும் .... கிழக்கு

கமர்நிசா சொத்துக்கும் .... வடக்கு

தென்வடல் ரோட்டுக்கும் பாய் அம்மாள் சொத்துக்கும் ... மேற்கு

இதன் மத்தியில்

வடபுரம் கிழமேலடி ... 29½

தென்புரம் கிழமேலடி ... 29½

கிழபுரம் தென்வடலடி ... 48

மேல்புறம் தென்வடலடி ... 44¾

இந்த அளவுகள் கொண்ட 1372 சதுரடி இடமும், மேற்படி இடத்துக்கு கிழபுரம் தென்கோட்டில் கிழமேலடி 15½ தென்வடலடி 6 உள்ள 93 சதுரடி உள்ள சந்து தட பூர்ண பாத்தியமும். ஆக மொத்தம் 1465 சதுரடி (136.10 சதுர மீட்டர் ) விஸ்தீரணமுள்ள இடமும், இதில் கிழக்கும் வடக்கும் பார்த்துள்ள 550 சதுரடி (51.10 சதுர மீட்டர்) விஸ்தீரணமுள்ள வில்லை வீடுகளும் மேற்படி வீட்டிலுள்ள சகல ரூம்களும், மின்சார இணைப்பும், மின் இணைப்பு எண்.S.C.No.389-005-397 நெ. பாத்தியமும், தண்ணீர் குழாய் இணைப்பு எண்.S.C.No.43ம் இவைகளின் டெபாசிட் துகை பாத்தியமும், பாத்ரூம், பிளஷ்அவுட் கக்கூஸ் 1ம் முன்புரமுள்ள காலியிடமும், மாமூல் தடபாத்தியமும் சகிதம். மேற்படி வீட்டில் ஏற்படும் கழிவு நீர், மழைத்தண்ணீர் இவைகளை இப்போது போய்க்கொண்டிருப்பது போலவே மாமூல் படி கழித்துவிட்டுக் கொள்ளும் பாத்தியம் சகிதம்.

மேற்படி வீடானது சூளேஸ்வரன்பட்டி, மகாத்மா காந்தி வீதி கதவு எண்.35, வரிவிதிப்பு எண்.3290.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஏப்ரல் மாதம் 11ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**இறுதி உத்தரவு**

அ.வ.எண்.393/2020

இல்

இ.ம.எண்.01/2020

நாள் : 11.04.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------